ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2396/54 - 2024 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2024.08.09
*2396/54 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ 5/83* (III)

***1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்***

*1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த அமரவீர** (பா.உ.),
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்
கைத்தொழில்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 31.*

1A – PG6817 – 504 (2024/08)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

*2010 மே 25 ஆந்தேதிய 1655/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.*

*(1) அதன் 3 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும்.*

*"3. பீடை கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், இருபத்தையாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.".*

*(2) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்.*

*"(அ) ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், தற்போதைய உரிமக்காலம் கழிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், பத்தாயிரம் ரூபா புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட வேண்டுதற் படிவத்தில் அது சார்பாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் புதுப்பிக்கவும்படலாம்."*

*(3) அதன் 5 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியைச் சேர்ப்பதன் மூலமும்.*

*"5. அ உரிமமொன்று வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களின் பின்னர் அவ்வுரிமத்தின் புதுப்பித்தலுக்காகச் செயற்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிந்திய ஆண்டுக்காகவும் பத்தாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.".*

EOG 08 - 0117